TAMIL MALAR DAILY
தமிழ் மலர்

**Jumlah Perdagangan Negara meningkat RM 21.670 juta**

# நாட்டின் மொத்த வர்த்தக அளவு வெ. 21,670 கோடியாக உயர்வு



கோலாலம்பூர், ஜன. 29–

கடந்தாண்டு டிசம்பரில் மலேசியாவின் மொத்த வர்த்தக அளவு 26.8 விழுக்காடு உயர்வு கண்டு 21,670 கோடி வெள்ளியை எட்டியது என்று புள்ளிவிவரத்துறை நேற்று தெரிவித்தது.

கடந்த 2020 ஆண்டின் டிசம்பர் மாத வர்த்தக அளவுடன் ஒப்பிடுகையில் இந்த கணிசமான உயர்வு பதிவாகி உள்ளது. நாட்டின் பொருளாதாரம் மீட்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதை இது காட்டுகிறது என்று அது குறிப்பிட்டது.

கடந்த 2021ஆம் ஆண்டில் மொத்த வர்த்தக அளவு இரண்டு லட்சத்து இருபதாயிரம் கோடி (2.2 டிரில்லியன்) வெள்ளியாக பதிவாகியிருக்கிறது. மலேசியாவின் மொத்த வர்த்தக அளவு இந்த அள உயர்வு கண்டிருப்பது இதுவே முதன்முறையாகும் என் புள்ளிவிவரத்துறையின் தலைவ முகமட் உஸிர் மாஹிடின் கூறினா

ஏற்றுமதியும் இறக்குமதியு கணிசமான அளவுக் அதிகரித்ததே இதற்கு முக்கி காரணமாகும். டிசம்பர் மாதத்தி உள்நாட்டு ஏற்றுமதி 10, 27 கோடி வெள்ளியாக இருந்தது மொத்த ஏற்றுமதி அளவில் இத பங்களிப்பு 83 விழுக்காடாகு 2020ஆம் ஆண்டு டிசம்ப மாதத்துடன் ஒப்பிடுகையி 2021 டிசம்பர் மாத ஏற்றுமதி 30. விழுக்காடு உயர்ந்திருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

Tamil Malar